**நீதித்துறை நடுவர் நீதிமன்றம், தேவகோட்டை.**

**முன்னிலை:- செல்வி. D. பூர்ணிமா, B.A.B.L.(Hons.),LL.M.,**
**நீதித்துறை நடுவர், தேவகோட்டை.**

**2026 ம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 18-ம் நாள் சனிக்கிழமை**
**திருவள்ளுவராண்டு 2057 விசுவாவசு வருடம் சித்திரை திங்கள் 05-ம் நாள்**

**ஆண்டுப்பட்டிகை வழக்கு எண். 177/2017**
(குற்ற எண்.124/2016, ஆறாவயல் காவல் நிலையம்)

அரசுக்காக,
காவல் உதவி ஆய்வாளர்,
ஆறாவயல் காவல்நிலையம்,
குற்ற எண்.124/2016.

….குற்றமுறையிடுபவர்

/எதிராக/

1.சபரி (1 வது எதிரி) (24/2017)
த/பெ. திருவள்ளுவர்

…..எதிரி

குற்றவியல் நடைமுறை விதிகள், 2019 விதி 106(4)ன் படி வழக்கின்
சுருக்கம்

| வ.எண் | விளக்கம் | விபரங்கள் |
|---|---|---|
| 1. | குற்றமுறையிடுபவர் | காவல் உதவி ஆய்வாளர்,<br>ஆறாவயல் காவல்நிலையம்,<br>குற்ற எண்.124/2016. |
| 2. | எதிரிகள் | 1.சபரி<br>த/பெ. திருவள்ளுவர்<br>**<u>முகவரி:</u>** |

| | | | | |
|---|---|---|---|---|
| | | மொட்டையன் வயல், தேவகோட்டை தாலுகா. | | |
| 3. | குற்றச்சாட்டுகள் | எதிரி மீது இதச பிரிவுகள் 341, 294(b), 323, 506(2)-ன் கீழ் குற்றம் சாட்டப்பட்டுள்ளது. **(இவ்வழக்கின் 2 வது எதிரி பிரதீப் கடந்த 06/09/2024 ம் தேதி இறந்துவிட்டதால் அவரைப் பொறுத்து வழக்கு அற்றுப்போய்விட்டதாக 23/05/2025 ம் தேதி உத்தரவிடப்பட்டுள்ளது.)** | | |
| 4. | சம்பவம் நடந்த நாள் | 18/12/2016 | | |
| 5. | முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்ட நாள் | 18/12/2016 | | |
| 6. | எதிரி கைது செய்யப்பட்ட நாள் | இல்லை | முன்பிணை பெற்ற நாள்: 02/01/2017 | |
| | பிணையில் சென்ற விபரம் மற்றும் நாள் | இல்லை | | |
| 7. | குற்றப்பத்திரிக்கை தாக்கல் செய்யப்பட்ட நாள் | 11/10/2017 | | |
| 8. | கு.வி.மு.ச பிரிவு 241-ன் கீழ் குற்றம் குறித்து வினவப்பட்ட நாள் | 22/02/2018 | | |
| 9. | கு.வி.மு.ச பிரிவு 317-ன் கீழ் தாக்கல் செய்யப்பட்ட மனுக்களை தவிர மற்ற மனுக்கள் தாக்கல் செய்யப்பட்ட விபரம் மற்றும் அதன் முடிவுகள் | ----- | | |
| 10. | வழக்கின் சாட்சிகள் முதல் விசாரணை மற்றும் குறுக்கு | சாட்சிகள் | முதல் விசாரணை | குறுக்கு விசாரணை |

| | | | | |
|---|---|---|---|---|
| | விசாரணை செய்யப்பட்ட நாள் | அ.சா.1 | 24/08/2018 | 24/08/2018 |
| | | அ.சா.2 | 24/08/2018 | 24/08/2018 |
| | | அ.சா.3 | 27/09/2018 | 27/09/2018 |
| | | அ.சா.4 | 27/09/2018 | 27/09/2018, 10/02/2026 |
| | | அ.சா.5 | 17/11/2022 | 17/11/2022 |
| | | அ.சா.6 | 29/07/2025 | 29/07/2025 |
| | | அ.சா.7 | 19/02/2026 | 19/02/2026 |
| 11. | எதிரியிடம் குற்றம் குறித்து கு.வி.மு.ச பிரிவு 313(1)(ஆ)ன் கீழ் வினவிய நாள் | 06/08/2025, 03/03/2026 | | |
| 12. | எதிரிகளின் மீது பிடியாணை வழங்கப்பட்ட நாள் மற்றும் திரும்ப பெறப்பட்ட நாள் | பிடியாணை வழங்கப்பட்ட நாள் | பிடியாணை திரும்ப பெறப்பட்ட நாள் | |
| | | ------ | ----- | |
| 13. | வழக்கு விசாரணை தொடங்கிய நாள் | 22/02/2018 | | |
| 14. | வழக்கு விசாரணை முடிந்த நாள் | 03/03/2026 | | |
| 15. | தீர்ப்பு பகரப்பட்ட நாள் | 18/04/2026 | | |
| 16. | தீர்வு | **முடிவாக, எதிரி இதச பிரிவுகள் 341, 294(b), 323, 506(2)-ன் கீழ் குற்றவாளி அல்ல என்று தீர்மானித்து எதிரியை மேற்படி குற்றச்சாட்டுகளை** | | |

| | | |
|---|---|---|
| | | **பொறுத்து குவிமுச பிரிவு 248(1)-ன் கீழ் விடுதலை செய்து இந்நீதிமன்றம் தீர்ப்பளிக்கிறது.** |

இந்த வழக்கானது என் முன்பாக இறுதி விசாரணைக்கு வந்தபோது குற்றமுறையிடுபவர் தரப்பில் அரசு வழக்கறிஞர் நிலை 2 அவர்கள் முன்னிலையாகியும், எதிரி தரப்பில் வழக்கறிஞர் திரு.திருப்பதி, அவர்கள் முன்னிலையாகியும், இருதரப்பு வாதங்கள் கேட்கப்பட்டும், வழக்காவணங்களை பரிசீலனை செய்தும், இதுநாள் வரை இந்நீதிமன்ற சீரான பரிசீலனையிலிருந்து வந்து இன்று இந்நீதிமன்றம் வழங்கும்

**<u>தீர்ப்புரை</u>**

**1. குற்றமுறையீட்டின் சுருக்கம்:-**

கடந்த 18.12.16-ம் தேதி காலை 11.30 மணியளவில் இவ்வழக்கின் வாதி தன் நண்பர்கள் நாகராஜன் மகன் கார்த்திக், வெங்கடேசன் மகன் பிரபாகரன் @ பிரபா ஆகிய மூவரும் TN 63 AS 8614 என்ற எண்ணுள்ள இரண்டுசக்கர வாகனத்தை அஜித்குமார் ஓட்ட மூவரும் ஆவுடையார்கோவில் அருகே உள்ள அரசூர் சென்றுவிட்டு வாதியின் பெரியம்மாவை பார்த்துவிட்டு திரும்ப ஊருக்கு வெங்களூர் பாலம் அருகே வந்த சமயம் மூன்று எதிரிகளும் வாதியையும் மற்றவர்களையும் வண்டியுடன் வழிமறித்து மூவரும் வாதியை பார்த்து ஏண்டா தேவிடியா புண்டை மயனே என்று அசிங்கமாக திட்டி 2-வது எதிரி பிரதீப் அருகில் கிடந்த கம்பை எடுத்து வாதியின் தலை மற்றும் வலது கால் ஆகிய இடங்களில் அடித்து சாதாரண காயம்

உண்டு பண்ணியும் அந்த கம்பை 1-வது எதிரி சபரி வாங்கி வாதியின் இடது கை முதுகு ஆகிய இடங்களில் அடித்து சாதாரண காயம் ஏற்படுத்தியும் சாட்சிகள் சத்தம் போடவும் 1-வது எதிரியும் 2-வது எதிரியும் வாதியை கொல்லாமல் விடமாட்டேன் என்று மிரட்டி சென்ற குற்றத்திற்காக எதிரிகள் மீது இதச பிரிவுகள் 341, 294(b), 323, 324, 506(2)-ன் கீழ் குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2. வழக்கு கோப்பிற்கு எடுக்கப்பட்டு எதிரி இந்நீதிமன்றத்தில் ஆஜரானதும் இவ்வழக்கு ஆவணங்களின் நகல்கள் அனைத்தும் கு.வி.மு.ச. பிரிவு 207 இன் படி எதிரிக்கு இலவசமாக வழங்கப்பட்டது.

3. போதிய கால அவகாசம் கொடுக்கப்பட்ட பின்னர் எதிரி மீது இதச பிரிவுகள் 341, 294(b), 323, 506(2)-ன் கீழ் குற்றச்சாட்டுக்கள் வனைந்து விளக்கி வினவிய போது எதிரி குற்றங்களை மறுத்துரைத்தார். எனவே அரசு தரப்பு சாட்சியங்களின் விசாரணைக்கு உத்தரவிடப்பட்டது. இவ்வழக்கின் 2 வது எதிரி பிரதீப் கடந்த 06/09/2024 ம் தேதி இறந்துவிட்டதால் அவரைப் பொறுத்து வழக்கு அற்றுப்போய்விட்டதாக 23/05/2025 ம் தேதி உத்தரவிடப்பட்டுள்ளது.

4. அரசுத்தரப்பில் அ.சா.1 முதல் அ.சா.7 வரையிலான சாட்சிகள் விசாரிக்கப்பட்டும், அ.சா.ஆ 1 முதல் அ.சா.ஆ.8 வரையிலான சான்றாவணங்களும் குறியீடு செய்யப்பட்டுள்ளது.

**5. அரசு தரப்பு சாட்சிகளின் சாட்சியங்களிலிருந்து தெரிய வரும் அரசு தரப்பு வழக்கின் சுருக்கம்:-**

(5.1) அ.சா.1 கார்த்திக் (எ) கார்த்திக்ராஜா தனது சாட்சியத்தில் கடந்த 18.12.2016 ம் தேதி பகல் 12.00 மணியளவில் தான் அஜீத், பிரபாகரன் ஆகியோர்கள் ஆவடையார்கோவில் பக்கத்தில் உள்ள அரசூருக்கு சென்றுவிட்டு திரும்பி வெங்களூர் பாலம் பக்கம் வந்தபோது எதிரிகள் சபரியும், பிரதீப்பும் தங்களை பைக்கில் வரும்போது வழிமறித்தார்கள் என்றும் அவர்கள் தாங்கள் ஒன்றாக வந்த ஒரு பைக்கின் சாவியை பிடுங்கினார்கள் என்றும் மேற்படி எதிரி சபரி அஜீத்தை கம்பால் தலை, முதுகு, வலது கால் ஆகியவற்றில் அடித்தார் என்றும் அவ்வாறு அடித்ததில் தலையில் இரத்தம் வந்தது என்றும் மேற்படி எதிரி பிரதிப் தலை, முதுகில், வலது கை ஆகியவற்றில் அடித்தார் என்றும் மற்றொரு எதிரி பெயர் அரவிந்த் ஆகும் என்றும் மேற்படி அரவிந்த் அஜித்குமார் மண்டையில் கல்லால் அடித்தார் என்றும் அவர்கள் அடித்துவிட்டு போய்விட்டார்கள் என்றும் பின்னர் அஜீத்தை தாங்கள் தேவகோட்டை அரசு மருத்துவமனையில் சிகிச்சைக்கு சேர்த்தோம் என்றும் நடந்த சம்பவம் பற்றி அஜீத்குமார் அம்மாவிடம் தகவல் காவல் சொன்னோம் என்றும் அஜீத் சிகிச்சையில் இருக்கும்போது ஆறவாயல் நிலையத்திலிருந்து போலீசார் வந்தார்கள் என்றும் வந்த போலீசிடம் அஜுத் விவரம் சொன்னார் என்றும் போலீஸ் புகார் எழுதினார்கள் என்றும் போலீசார் தன்னை விசாரித்தார்கள் என்றும் சாட்சியம் அளித்துள்ளார்.

(5.2) அ.சா.2 சுசீலா தனது சாட்சியத்தில் தனது தம்பி மகளுக்கு ஆப்ரேசன் செய்வதற்காக பணம் பற்றவில்லை என்பதால் ஆவடையார்கோவில் பக்கம் அரசூரில் இருக்கும் எனது அக்கா பூமயிலிடம் பணம் பெற 18.12.2016ம் தேதி அஜீத்குமார் சென்றார் என்றும் அவருடன் கார்த்திக், பிரபாகரன் ஆகியோர்கள் தான் சொல்லி சென்றார்கள் என்றும் வண்டியில் வந்த எனது பையனை பிரதீப், சபரி, அரவிந்த் ஆகியோர் வெங்களூர் பாலம் பக்கம் மறித்துள்ளார்கள் என்றும் மேற்படி சம்பவம் 12, 1 மணியளவில் தனக்கு தகவல் தெரியும் என்றும் மேற்படி கார்த்திக், பிரபாகரன் ஆகியோர் தன்னிடம் மேற்படி நபர்கள் தனது மகனை அடித்துவிட்டதாக சொன்னார்கள் என்றும் தனது மகனை சிகிச்சைக்காக தேவகோட்டை அரசு மருத்துவமனையில் சேர்த்தேன் என்றும் பையனை அடித்துவிட்டார்கள் என்று தான் ஆறாவயல் காவல்நிலையத்தில் சொன்னேன் என்றும் தனது மகனுக்கு தலை மற்றும் உடம்பில் காயம் ஏற்பட்டிருந்தது என்றும் போலீசார் தன்னை விசாரித்தார்கள் என்றும் சாட்சியம் அளித்துள்ளார்.

(5.3) அ.சா.3 பாண்டி தனது சாட்சியத்தில் தன்னிடம் காண்பிக்கப்படும் பார்வை மகஜரில் கண்ட கையெழுத்து தன்னுடையதுதான் என்றும் கடந்த 19.12.2016 காலை 8.30 மணியளவில் தேவகோட்டையிலிருந்து நள்ளிவயலுக்கு சென்றுகொண்டிருந்தபோது நள்ளிவயலுக்கு செல்லும் வழியில் உள்ள தேனாற்று பாலத்து அருகே அங்கே ஆறாவயல் போலீஸ் நின்றார்கள் என்றும் போலீசார் தங்கள் ஊரில் ஒரு பையனை அடித்தது சம்மந்தமாக விசாரணை செய்து

கொண்டிருந்தார்கள் என்றும் சண்டை நடந்ததை அடுத்து போலீசார் பார்வையிட்டு சம்பவ இடத்திற்கு அருகில் இருந்த அடையாளங்களை குறித்துக்கொண்டு அறிக்கை தயார்செய்தார்கள் என்றும் போலீசார் தயார் செய்த அறிக்கையில் தான் கையெழுத்து போட்டேன் என்றும் தான் கையெழுத்து போட்ட பார்வை மகஜர் அசாஆ.1. என்றும் வழக்கு சம்மந்தமாக போலீசார் தன்னை விசாரித்தார்கள் என்றும் சாட்சியம் அளித்துள்ளார்.

(5.4) அ.சா.4 லெட்சுமி தனது சாட்சியத்தில் தன்னிடம் காண்பிக்கப்படும் பார்வை மகஜரில் கண்ட கையெழுத்து தன்னுடையதுதான் என்றும் கடந்த 19.12.2016 காலை 8.30 மணியளவில் தேவகோட்டையிலிருந்து நள்ளிவயலுக்கு வண்டியில் தனது கொழுந்தனுடன் சென்றுகொண்டிருந்தபோது வழியில் உள்ள வெங்களூர் தேனாற்று பாலத்து அருகே அங்கே ஆறாவயல் போலீஸ் நின்றார்கள் என்றும் போலீசார் தங்கள் ஊரில் உள்ள அஜித் என்ற ஒரு பையனை அடித்தது சம்மந்தமாக விசாரணை செய்து கொண்டிருந்தார்கள் என்றும் சண்டை நடந்ததை அடுத்து போலீசார் பார்வையிட்டு சம்பவ இடத்திற்கு அருகில் இருந்த அடையாளங்களை குறித்துக்கொண்டு வரைபடமும், அறிக்கையும் தயார்செய்தார்கள் என்றும் போலீசார் தயார் செய்த அறிக்கையில் தான் கையெழுத்து போட்டேன் என்றும் தான் கையெழுத்து போட்ட பார்வை மகஜர் அசாஆ.1. ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது பார்வை மகஜரில் உள்ள தனது கையெழுத்து மட்டும் அசாஆ.2 ஆகும் என்றும்

வழக்கு சம்மந்தமாக போலீசார் தன்னை விசாரித்தார்கள் என்றும் சாட்சியம் அளித்துள்ளார்.

(5.5) அ.சா.5 செங்கதிர் தனது சாட்சியத்தில் தற்போது தேவகோட்டை அரசு மருத்துவமனையில் தலைமை மருத்துவராக பணியாற்றி வருகிறேன் என்றும் தான் கடந்த 18.12.2014 ம் தேதி அன்று தேவகோட்டை அரசு மருத்துவமனையில் பணியிலிருந்த சமயம் நண்பகல் 12.01 நிமிடத்தில் ஆஜரான அஜித்குமார் என்பவரை பரிசோதனை செய்த போது அவர் தனது 2 நண்பர்களுடன் இரு சக்கர வாகனத்தில் வெங்களுரில் இருந்து தேவகோட்டை சென்ற போது வெங்களுர் அருகே உள்ள சாலையின் வேகத்தடையை கடக்கும் போது தடுமாறி விழுந்ததால் தனக்கு காயம் ஏற்பட்டதாக கூறினார் என்றும் அவரை பரிசோதனை செய்த போது அவருக்கு கீழ்கண்ட காயங்கள் இருந்தது என்றும்1) அவரது பின் மண்டையில் 2x1 செ.மீ சதையளவு அழத்துடன் கூடிய ஒரு சிதைந்த காயம் இருந்தது. அதன் அருகாமையில் 4 x 4 செ.மீ அளவில் ஒரு வீக்க காயம் இருந்தது. அவர் தனக்கு கடுமையாக தலை வலிப்பதாகவும், மயக்கம் வருவதாகவும், கால் வலிப்பதாகவும் கூறினார் என்றும் அவரை உள்நோயாளியாக அனுமதித்து சிகிச்சை அளித்தேன் என்றும் அவருக்கு ஏற்பட்ட காயங்கள் சாதாரணக் காயங்கள் என சான்று வழங்கினேன் என்றும் காயச்சான்று அ.சா.ஆ.3 என்றும் போலிசார் தன்னை விசாரித்தார்கள் என்றும் சாட்சியம் அளித்துள்ளார்.

(5.6) அ.சா.6 சந்திரசேகரன் தனது சாட்சியத்தில் இவ்வழக்கின் புலன்விசாரணை அதிகாரியாக புலன்விசாரணை மேற்கொண்டு குற்ற இறுதிஅறிக்கை தாக்கல் செய்தது குறித்து சாட்சியம் அளித்து புகார் மனு அ.சா.ஆ.4 ஆகவும், முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ.5 ஆகவும், பார்வை மகஜர் அ.சா.ஆ.6 ஆகவும், மாதிரி வரைபடம் அ.சா.ஆ.7 ஆகவும் தாக்கல் செய்து சாட்சியம் அளித்துள்ளார்.

6. அரசு தரப்பு சாட்சியங்களிலிருந்தும், ஆவணங்களிலிருந்தும் எதிரிக்கு பாதகமாகத் தோன்றும் அம்சங்கள் மற்றும் சூழ்நிலைகள் குறித்து பி.என்.எஸ்.எஸ் பிரிவு 313(1)(b) இன் கீழ் வினவ எதிரி சாட்சியங்களை பொய் என மறுத்துரைத்தார். மேலும் எதிரி தமது தரப்பில் சாட்சியங்கள் உள்ளதாக தெரிவித்திருந்தபோதிலும் எதிரி தரப்பில் சாட்சியம் எதுவும் விசாரிக்கப்படாமல் எதிரி தரப்பு சாட்சியத்தை முடித்துக்கொள்ளலாம் என்று எதிரி தரப்பு வழக்கறிஞரால் மேலெழுத்து செய்யப்பட்டதன் அடிப்படையில் எதிரி தரப்பு சாட்சியம் முடிக்கப்பட்டது.

7. இந்த வழக்கில் தீர்வுக்குரிய பிரச்சனை என்னவென்றால், அரசு தரப்பில் எதிரி மீதான குற்றச்சாட்டுகளை தகுநிலை ஐயப்பாட்டிற்கு அப்பாற்பட்டு சந்தேகத்திற்கு இடமில்லாமல் நிரூபணம் செய்யப்பட்டுள்ளதா என்பதேயாகும்?

**8. தீர்வு**

(8.1) இவ்வழக்கின் புகார்தாரரும் பாதிக்கப்பட்வருமான அ.சா.7 புகாரிலுள்ள குற்றச்சாட்டுக்களை வலியுறுத்தும் விதமாக சாட்சியம் அளிக்காமல் வண்டியில்

போய்க் கொண்டிருந்தபோது வண்டியில் இருந்து விழுந்து விட்டதாகவும் ஆஜர் எதிரி தான் காரணம் என நினைத்து அவர் மீது புகார் கொடுத்ததாகவும் ஆனால் எதிரி காரணம் இல்லை என்று அரசு தரப்பு வழக்கிற்கு விரோதமாக சாட்சியம் அளித்துள்ளார்.

(8.2) இவ்வழக்கில் கண்ணுற்ற சாட்சியாக விசாரிக்கப்பட்டுள்ள அ.சா.1 புகாரிலுள்ள குற்றச்சாட்டுக்களை வலியுறுத்தும் விதமாக சாட்சியம் அளித்துள்ளபோதிலும் பாதிக்கப்பட்டவராக சொல்லப்படும் அ.சா.7 தனக்கு எதிரியால் காயம் ஏற்பட்டதாகவோ எதிரி தன்னை தாக்கியதாகவோ அரசு தரப்பு வழக்கை வலியுறுத்தும் விதமாக சாட்சியம் அளிக்காத நிலையில் அ.சா.1ன் சாட்சியத்தை மட்டும் கொண்டு எதிரியை தண்டிப்பது நீதியின் பால் உகந்ததாக இருக்காது. அ.சா.2ன் சாட்சியத்தை முழுவதுமாக பரிசீலிக்கையில் அ.சா.2 சம்பவத்தை நேரடியாக பார்க்கவில்லை என்பது தெளிவாகிறது. இதர சாட்சிகளில் அ.சா.3 மற்றும் 4 ஆகியோர் பார்வை மகஜர் சாட்சிகள் ஆவர், அ.சா.5 மருத்துவர் ஆவார், அ.சா.6 விசாரணை அதிகாரியாவார். ஆகவே அ.சா.1ன் சாட்சியத்தை உறுதிப்படுத்தும் விதமாக இந்த வழக்கில் எந்த சாட்சியமும் அமையவில்லை. எனவே மேற்கண்ட விவாதங்களையும், காரணங்களையும், சந்தர்ப்ப சூழ்நிலைகளையும் கருத்தில் கொள்கையில் எதிரி மீதான குற்றச்சாட்டுக்களை அரசு தரப்பில் சந்தேகத்திற்கு அப்பாற்பட்டு நிரூபிக்கத்தவறியுள்ளதாக இந்நீதிமன்றம் தீர்வு காண்கிறது. எனவே எதிரி சந்தேகத்தின் பலனைப் பெற தகுதியுடையவர் ஆகிறார்.

**9) முடிவாக, எதிரி இதச பிரிவுகள் 341, 294(b), 323, 506(2)-ன் கீழ் குற்றவாளி அல்ல என்று தீர்மானித்து எதிரியை மேற்படி குற்றச்சாட்டுகளை பொறுத்து குவிமுச பிரிவு 248(1)-ன் கீழ் விடுதலை செய்து இந்நீதிமன்றம் தீர்ப்பளிக்கிறது.**

இந்த தீர்ப்புரை என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் கணினியில் நேரடியாக தட்டச்சு செய்யப்பட்டு என்னால் சரிபார்க்கப்பட்டு இன்று 2026-ம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 18-ம் நாள் என்னால் திறந்த நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

**ஒப்பம்/- D. பூர்ணிமா, B.A.B.L.(Hons.),LL.M.,**
**நீதித்துறை நடுவர்**
**தேவகோட்டை.**

**அரசு தரப்பு சாட்சிகள்:**

| S.No | Witness of the Prosecution | How examined | Description of the Witness |
|---|---|---|---|
| 1. | கார்த்திக் (எ) கார்த்திக்ராஜா | அ.சா.1 | கண்ணுற்ற சாட்சி |
| 2. | சுசீலா | அ.சா.2 | கேள்விப்பட்ட சாட்சி |
| 3. | பாண்டி | அ.சா.3 | பார்வை மகஜர் சாட்சி |
| 4. | லெட்சுமி | அ.சா.4 | பார்வை மகஜர் சாட்சி |
| 5. | செங்கதிர் | அ.சா.5 | அரசு மருத்துவர் |
| 6. | சந்திரசேகரன் | அ.சா.6 | விசாரணை அதிகாரி |
| 7. | அஜித்குமார் | அ.சா.7 | புகார்தாரர் மற்றும் |

| | | | |
|---|---|---|---|
| | | | பாதிக்கப்பட்டவர் |

**Judicial Form No. 68**

**அரசு தரப்பு சான்றாவணங்கள்:**

| S.No | Description of the exhibit | Date when the exhibit was filed in the case | How marked | By whom filed | Remarks |
|---|---|---|---|---|---|
| 1. | பார்வை மகஜரில் உள்ள 1 வது கையெழுத்து | 27/09/2018 | அ.சா.ஆ.1 | அரசு தரப்பு | அசல் |
| 2. | பார்வை மகஜரில் உள்ள 2 வது கையெழுத்து | 27/09/2018 | அ.சா.ஆ.2 | அரசு தரப்பு | அசல் |
| 3. | காயச்சான்று | 17/11/2022 | அ.சா.ஆ.3 | அரசு தரப்பு | அசல் |
| 4. | புகார் மனு | 29/07/2025 | அ.சா.ஆ.4 | அரசு தரப்பு | அசல் |
| 5. | முதல் தகவல் அறிக்கை | 29/07/2025 | அ.சா.ஆ.5 | அரசு தரப்பு | அசல் |
| 6. | பார்வை மகஜர் | 29/07/2025 | அ.சா.ஆ.6 | அரசு தரப்பு | அசல் |
| 7. | மாதிரி வரைபடம் | 29/07/2025 | அ.சா.ஆ.7 | அரசு தரப்பு | அசல் |
| 8. | புகார் | 19/02/2026 | அ.சா.ஆ.8 | அரசு தரப்பு | அசல் |

**அரசு தரப்பு சான்றுப் பொருள்: இல்லை**

**எதிரி தரப்பு சாட்சி,சான்றாவணம், சான்றுப் பொருள் - இல்லை**

**ஒப்பம்/- D. பூர்ணிமா, B.A.B.L.(Hons.),LL.M.,**

**நீதித்துறை நடுவர்**

**தேவகோட்டை.**

<u>**பின்குறிப்பு:-**</u>

1. எதிரி விசாரணை காலத்தில் பிணையில் இருந்தார்.

2. வழக்கின் முடிவு காவல்துறைக்கு தெரிவிக்கப்பட்டது.

3.விசாரணை காலத்தில் சாட்சிகள் யாரும் 3 நாட்களுக்கு மேல் நிறுத்தி வைக்கப்படவில்லை.